

இந்திய தோட்டக்கலை மற்றும் உணவு பதனிடுதல் சேவை மைய செயல் இயக்குநர் புஷ்பகுமாருக்கு, மதுரை பாரதி பண்பாட்டுக்கழக மாநில தலைமையகம் இளையபாரதி விருதை வழங்கியது.

## இந்திய தோட்டக்கலை, உணவு பதனிடுதல் சேவை மைய

# செயல் இயக்குநர் புஷ்பகுமாருக்கு இளைய பாரதி விருது

சேலம், அக்.17: உழைப்பால் பல்வேறு தொழிற்துறைகளில் வெற்றி பெற்று சமுதாய சிந்தனையுடன் நாட்டிற்கும், வீட்டிற்கும் பயனுள்ள வகையில் செயலாற்றி வரும் இந்திய தோட்டக்கலை மற்றும் உணவு பதனிடுதல் சேவை மைய செயல் இயக்குநர் புஷ்பகுமாருக்கு, நவீன முறையில் விவசாயம் செய்தல் உணவு பொருட்கள் பதனிடுதல், சேவைக்காக மதுரை பாரதி பண்பாட்டுக் கழகம் மாநில தலைமையகத்தால் இளைய பாரதி விருது வழங்கப்பட்டது. இதை மதுரை மாநகர துணை காவல் கண்காணிப்பாளர் திருநாவுக்கரசு வழங்கினார்.

நிகழ்ச்சிக்கு மாநில தலைவர் குருசாமி முன்னிலை வகித்தார். இந்திய வனச்சரக அதிகாரி ராஜ்குமார் கலந்து கொண்டனர்.

வேளாண்மையில் அதிக லாபம் பெறுவது குறித்து, ஓசூர், தாலுகா அலுவலகம் எதிரில் செயல்படும் இந்திய தோட்டக்கலை மற்றும் உணவு பதனிடுதல் சேவை மையத்தின் செயல் இயக்குநர் புஷ்பகுமார் கூறியதாவது:

உயர் தொழில் நுட்ப வேளாண்மை முறையில் பசுமை குடில்கள், நிழல் குடில்கள் மற்றும் மேம்படுத்தப்பட்ட அமைப்புகளை கொண்டு விவசாயம் செய்யலாம். இத்தகைய பசுமை குடில், நிழல் குடில் விவசாயம் செய்வதன் மூலம் பாரம்பரிய விவசாய உற்பத்தியின் அளவில் 5ல் இருந்து 10 மடங்கு விளைச்சல் அதிகம் கிடைக்கும். காரணம் நோய் தாக்கம் குறைவு, செடிக்கு தேவையான தட்பவெப்ப நிலை, பாதுகாக்கப்பட்ட வேளாண்மை, குறைந்த தண்ணீர் ஆகியவையே ஆகும். இத்தகைய குடில்கள் 20 வருடங்கள் நீடித்து உழைக்கும். இதில் குடை மிளகாய், தக்காளி, பேபிகார்ன் போன்ற காய்கறி வகைகளும், ரோஸ் ஜெரிபரா, கார்னீஷியன் போன்ற மலர் வகைகள் பயிரிடலாம். பசுமை குடில் அமைப்பதற்கு ஏக்கருக்கு ₹10 லட்சம் வரையும், நிழல் குடில் அமைப்பதற்கு ஏக்கருக்கு ₹5 லட்சம் வரை தேசிய தோட்டக்கலை வாரியத்தில் மானியம் கிடைக்கிறது.

திறந்தவெளி விவசாயத்தில் மேம்படுத்தப்பட்ட நில அமைப்புகளை கொண்டு, தென்னை, வாழை, புளி, பப்பாளி, எலுமிச்சை, மாதுளை, கொய்யா, சப்போட்டா, திராட்சை போன்ற பணப்பயிர்களை சாகுபடி செய்யலாம். திறந்தவெளி விவசாயத்தில் நிலம் மேம்படுத்த, வேலி அமைக்க, ஆழ்துளை கிணறு மற்றும் சொட்டுநீர் பாசனம் அமைக்க தோட்டக்கலை வாரியத்தில் ஏக்கருக்கு ₹30 ஆயிரம் மானியம் கிடைக்கிறது. விளைந்த பழங்கள், காய்கறிகள் அழுகி வீணாவதை தடுக்க உணவு பொருட்கள் பதப்படுத்தும் தொழில் துவங்க திட்ட மதிப்பீட்டில் 40% அரசு மானியம் கிடைக்கிறது.

மேற்கூறிய அனைத்து வேளாண்மை முறைகளுக்கும் தேசிய தோட்டக்கலை வாரியத்தின் வாயிலாக மானியம் பெற எங்கள் சேவை மையம் உறுதுணையாக இருக்கும். பசுமை குடில்கள், நிழல் குடில்கள் மற்றும் குளிர்பதன கிடங்கு, ஆய்வு கூடம், கட்டுமானம், விரிவாக்கம், நவீனமயமாக்குதல் ஆகியவற்றிக்கு மானியத்துடன் கூடிய முதலீட்டு கடனையும் பெற ஏற்பாடு செய்வதுடன், நாங்களே பசுமை குடில், நிழல் குடில் அமைத்து தருகிறோம்.

விவசாயிகளின் வசதிக்காக, ஓசூர் கிளை 04344 221648, 94877 28648, சேலம் கிளை 0427-2442455, கோவை கிளை 0422-2697701 என்ற எண்ணிலும் தொடர்பு கொண்டும், நேரில் சென்றும் ஆலோசனை பெறலாம்.

இவ்வாறு, சேவை மைய செயல் இயக்குநர் புஷ்பகுமார் தெரிவித்துள்ளார்.

சேலம் – ARRS
சங்கீத் A/c dts
நாமக்கல் – LMR
குமாரபாளையம் –
ஆத்தூர் –